(3) புதிய சிறு தொழில்களை நிறுவுவதற்குத் தேவையான அனுமதிகளை விரைவுபடுத்துவது குறித்த அறிக்கை.

ஏனைய ஒரு சில பொருள்கள் பற்றிய அறிக்கைகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன

(உ) முதலாவதும், மூன்றாவதும் பொருள்கள் குறித்த அறிக்கைகளின் படிகள் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது பொருள் குறித்த அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். டென்னிஸ் : நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு சமர்ப்பிக்க வேண்டிய இறுதி அறிக்கை எப்பொழுது சமர்ப்பிக்கப்படும்? ஆணைக்குழுவிற்காகச் செலவிடப்படும் தொகை எவ்வளவு? அறிக்கையைச் சமர்ப்பிக்கக் கால தாமதம் ஆகும் போது, அக்குழுவிற்காக ஆகும் செலவும் அதிகமாகத்தானே ஆகும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மற்ற பொருள்கள் குறித்த அறிக்கைகள் விரைவில் கிடைத்துவிடும் என்று கருதுகிறேன். கூடுமானவரை நிர்வாகத்தில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகத்தான் சீர்திருத்தக் குழு அமைக்கப்படுகிறது. ஆகவே, இதுவும் கால தாமதம் இல்லாமல் காரியங்களை முடிக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் சிபார்சுகளை அமுலாக்குவதன் மூலம் சர்க்காருக்குச் செலவு குறையுமா? அதிகமாகுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அமலாக்குவதன் மூலம் செலவு எந்த அளவு உயரும் அல்லது குறையும் என்பதை இப்பொழுது சொல்ல முடியாது. மேலும் நிர்வாகம் சீர்படுவதற்கு வழி நிச்சயமாக ஏற்படும்.

திரு. எஸ். ஆறுமுகம் : நிர்வாகம் சீர்பெறுவதற்கு வருவாய் வாரியத்தை—ரெவின்யூ போர்டை—ஒழிப்பதற்கு ஏதாவது பரிந்துரை வந்துள்ளதா? அப்படியானால் முடிவு கட்டும் வேலை விரைவில் நடைபெறுமா?

1973 மார்ச் 6]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த அறிக்கையே உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தாலே எவ்வகையான பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரியும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நிர்வாகச் சீர்திருத்தம் என்பது இப்பொழுது இருக்கிற அமைப்பையே வைத்துக்கொண்டு அதிலே என்ன சீர்திருத்தம் செய்வது என்பதுபற்றிப் பரிசீலிக்கப்படுகிறதா ? அப்படியில்லாமல், நிர்வாக அமைப்பை அடிப்படையிலேயே புதிதாக மாற்றியமைப்பதற்கான முயற்சி குறித்து ஆராய்ச்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சீர்திருத்தத்திற்கும் புரட்சிக்கும் உள்ள வேறுபாடு அதுதான்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Chief Minister whether there is any connection between the reports of the Central Administrative Reforms Commission and our State Administrative Reforms Commission and whether our Committee have made use of the recommendations of the Central Administrative Reforms Commission?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்கும் இதற்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்று கூற முடியாது. இந்தச் சீர்திருத்தங்களை ஆராயும் நோக்கில் அந்தக் குழுவினருக்கு ஒரு வேளை பயன்பட்டிருக்கக்கூடும்.

திரு. கே. எ. வகாப் : நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கைக்குப் பிறகாவது ரெட் டேபிஸம் என்று சொல்லப்படுகிற சிவப்பு நாடா முறை அடியோடு ஒழிக்கப்படுமா ? அதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே இதனுடைய பரிந்துரைகளுக்கு முன்பே இந்த அரசு கூடுமான வரையில் அந்த முறையை ஒழிப்பதற்குப் பாடுபட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரே அறிவார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS